# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 131 /2021

## Deposition of Witness for : PW 3

**Name** : திரு. கமலநாத்

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14-07-2022.**

**முதல் விசாரணை** -

ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன ரமேஷ் ஐ தெரியும். எதிரி சரன்யா இறந்து போன ரமேஷின் மனைவி ஆவார். அவர்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். கூட்டுக் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டதால், தனிக்குடித்தனம் நடத்தினார்கள். இருவருக்கும் அடிக்கடி தகராறு வரும். 2017 3வது மாதம் 7ந் தேதி நான் காலையில் பால் வியாபாரம் முடித்து ரமேஷ் வீட்டை தாண்டி செல்லும் போது காலை அ.சா.2 ன் குரல் கேட்டு நான் சென்று பார்த்த போது ரமேஷ் பிணமாக அவருடைய வாடகை வீட்டில் இறந்து கிடந்தார். இறந்து போன ரமேஷின் உடல் முழுவதும் ரத்த காயமாக இருந்தது. சடலத்தை எடுத்து வந்து வெளியில் வைத்தோம். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சடலத்தை சாலையில் வைத்து மறியல் செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் கடந்த 7.3.2017ந் தேதி இரவு சுமார் 1.30 மணிக்கு நான் தனியார் பால் நிறுவனத்திற்கு பாலை ஏற்றி விட்டு பாத்திரங்களை சுத்தம் செய்து பின்னர் மங்கலம் பஸ் நிலையத்தில் எனக்கு தெரிந்தவர்களுடன் பேசிவிட்டு பின்னர் ரமேஷ் குடியிருந்த வீட்டை கடந்து செல்லும் போது வீட்டில் உள்ளே இருந்து என்னை கொல்லாங்களே என்று சத்தம் கேட்டது. இவனை அடித்து கொன்றுவிடு என்று சரண்யாவின் குரலும் கேட்டது. நான் ரமேஷ் வீட்டிற்கு சென்று பார்த்த போது கார்த்திகேயன், ராஜசேகர், சரன்யா ஆகியோர் இருந்தார்கள். சரண்யா ரமேஷின் இரண்டு கைகளையும் பிடித்து கொள்ள கார்த்திகேயன் இரண்டு கைகளாலும் மாறி மாறி குத்தினார். ராஜசேகர் இவனை அடித்து கொல்லுங்கடா என்று கத்தினார். கார்த்திகேயன் அருகே இருந்த கயிற்றை எடுத்து ரமேஷின் கழுத்தில் போட்டு இறுக்கினார். அதனால் ரமேஷ் இறந்து விட்டார் என்றும், எங்களை பார்த்த ஆஜர் எதிரிகள் கார்த்திகேயனும், ராஜசேகரும் ஓடிவிட்டார்கள் என்றும், சம்பவத்தை நானும்,

எங்கள் ஊரைச் சேர்ந்த பெரியசாமியும், அன்பழகனும் பார்த்தோம் என்றும், நாங்கள் பயந்து கொண்டே வீட்டிற்கு வந்து விட்டோம் என்றும், போலீசார் எங்களை விசாரித்ததால் நான் நடந்ததை சொன்னேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை

ஒம்/- கமலநாத்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.